**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

FWC

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | இந்துநாகரிகம் |
|---|---|---|

## இந்து நாகரிகம் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *01)* | **1** | *11)* | **3** | *21)* | **1** | *31)* | **3** | *41)* | **2** |
| *02)* | **2** | *12)* | **5** | *22)* | **2** | *32)* | **4** | *42)* | **5** |
| *03)* | **3** | *13)* | **1** | *23)* | **1** | *33)* | **2** | *43)* | **1** |
| *04)* | **5** | *14)* | **3** | *24)* | **4** | *34)* | **2** | *44)* | **4** |
| *05)* | **4** | *15)* | **2** | *25)* | **3** | *35)* | **5** | *45)* | **3** |
| *06)* | **4** | *16)* | **3** | *26)* | **2** | *36)* | **5** | *46)* | **2** |
| *07)* | **2** | *17)* | **4** | *27)* | **5** | *37)* | **3** | *47)* | **4** |
| *08)* | **2** | *18)* | **4** | *28)* | **3** | *38)* | **1** | *48)* | **1** |
| *09)* | **4** | *19)* | **3** | *29)* | **1** | *39)* | **4** | *49)* | **5** |
| *10)* | **3** | *20)* | **3** | *30)* | **4** | *40)* | **3** | *50)* | **3** |

## இந்து நாகரிகம் - II

### பகுதி - I

*01)* (அ) சமயமரபு

இயற்கை சார்ந்த தெய்வங்களின் வழிபாடு விண்ணுலகம், மண்ணுலகம், இடையுலகம் சார்ந்த செய்வங்கள் பற்றிய தெய்வீகச் சிந்தனைகள் கடவுள் கோட்பாட்டிற்கு அடிப்படையான கடவுள் நம்பிக்கை வளர்ச்சி. யக்ஞம், யாகம், உபாசனை முறைகள் அக்கினி வழிபாடு முக்கியத்துவம் - மந்திரங்களை உச்சரித்தல் அவிப்பொருட்களை வழங்கி யக்ஞம் நிறைவேற்றுதல் புரோகிதரின் முக்கியத்துவம் உபாசனைகளை ஓம் என்னும் பிரணவத்தின் உபாசனை சதருத்திரிய உபாசனை - பல நாமங்களைக் கூறி வழிபடல் வழிபாட்டு முறையின் நோக்கம் - நீண்ட ஆயுள், மக்கட் பேறு காலந்தவறாத மழை, பசுமுதலான செல்வம் - பண்டமாற்றுமுறை - சாமவேதம் - இசையால் வழிபாடு (7 புள்ளிகள்)

(ஆ) தத்துவமரபு

இருக்கு வேதம் 1 ஆம் மண்டலம், 10 ஆம் மண்டலத்தில் இடம் பெறும் தத்துவக் கருத்துக்கள் கூறப்பட வேண்டும். பிரஜாபதி, விஸ்வகர்மன், விஸ்வதேவ் என்னும் கொள்கை பிற்கால பிரமம் பற்றிய சிந்தனையின் அடிப்படை ரிதக் கோட்பாடு
உபநிடதத்தில் பிரமம், ஆன்மா, கன்மம், மறுபிறப்பு பற்றிய சிந்தனைகள் (7 புள்ளிகள்)

(இ) சமுதாயம்

வேதகால இலக்கியம் அக்காலச் சமுதாயத்தில் பல்வேறு அம்சங்களைக் கூறுகின்றன. இருக்கு வேதத்தில் உள்ள பிரமச்சரிய சூக்தம் வாழ்க்கைப் படிநிலை பற்றிய சிந்தனைகளுக்கு எடுத்துக் காட்டு. குடும்பத் தலைவனின் முக்கிய கடமைகளில் ஒன்று வேள்விச் சடங்கை ஒழுங்காக மேற்கொள்ளுதல் சமூகக் கட்டமைப்பு - சமுதாயத் தொடர்புகள் பற்றிய கருத்துக்கள் உண்டு - புருஷசூக்தம் இதற்கு ஆதாரமாக உள்ளது. வேதகால மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். குழுத்தலைவன் ராஜன் நிலைக்கு உயர்தப்படல் அரச ஆட்சி சமிதி சபா - நால்வகை வருணக் கோட்பாடு - விளையாட்டு - அணிகலன் - பொழுது போக்கு - உணவு (6 புள்ளிகள்)

02) (அ) சமண பௌத்த சமயங்களின் வருகை அவர்களது செயற்பாடுகளால் சைவ பக்தி இயக்கத்தின் எழுச்சி - காரைக்காலம்மையார் முன்னோடி அவரின் பங்களிப்பு, பல்லவர் காலத்தில் அரசர்கள், மக்கள், நாயன்மார்களின் முயற்சி மக்களின் சிந்தனை மாற்றங்கள் அவர்கள் கையாண்ட வழிமுறைகள் (6 புள்ளிகள்)

(ஆ) நாயன்மார்களின் பங்கும் பணியும்

நாயன்மார்கள் பற்றிய அறிமுகம் சமய குரவர்களில் ஞானசம்பந்தர் பக்தி இயக்கத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்தியமை அப்பர், சம்பந்தர் சுந்தரர் பணிகள் அவர்களின் வழிமுறைகள் அவர்கள் செய்த அற்புதங்கள் பணிகள் ஏனைய நாயன்மார்களின் பணிகள் பங்களிப்புகள் பற்றிய விபரம் எழுதப்பட வேண்டும். (7 புள்ளிகள்)

(இ) பல்லவ அரசர்கள் குடைவரைக் கோயில்கள், ரதக் கோயில்கள் கற்றளிகள் என்பவற்றை அமைத்தமை. கிரியைகள், கலைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புகள் தலப் பெருமை பிற்கால பக்தி நெறிக்கும் கலை வளர்ச்சிக்கும் பல்லவர் கால பக்தி இயக்கமே மூலகாரணமாகியது. (7 புள்ளிகள்)

03) (அ) பிரமாண நூல்கள்

நூல்கள் - வேதம், குமார தந்திரம், சுப்பிரமணிய புஜங்கம், குமார சம்பவம் திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ் கந்தர் கலிவெண்பா (4 புள்ளிகள்)

(ஆ) தோற்றமும் வளர்ச்சியும்

சிந்துவெளியில் தாய் சேய்வடிவம் அறுவகைச் சமய நெறிகளில் ஒன்றாகிய குமாரக் கடவுள் வழிபாடு பற்றிய குறிப்பு வேதங்களில் சுப்பிரமணியோம் எனக் காணப்படுகின்றமை ஆகமங்களில் குமார தந்திரம் குமாரக் கடவுளின் தோற்றப் பொலிவு வழிபாட்டு முறை - புராணங்களில் - கந்தபுராணம் - திருவிளையாடல் புராண ஆதாரங்கள் குப்தர்கால ஆதாரங்கள் திருநெல்வேலி ஆதித்த நல்லூர் சான்றுகள் சங்ககாலம் தொடக்கம் கால அடிப்படையில் வரலாறு இலங்கையில் முருக வழிபாட்டு ஆதாரங்கள் (6 புள்ளிகள்)

(இ) வழிபாட்டுமுறை

ஆகம முறை சார்ந்த முறைசாரா வழிபாட்டு முறைகள் பற்றி விரிவாக எழுத வேண்டும்.

(ஈ) ஆலயங்களும் விரதங்களும்

அறுபடை வீடுகள் ஈழத்தில் கதிர்காமம், மண்டூர், மாவிட்டபுரம் செல்வச் சந்நிதி, நல்லூர், கந்தவனக் கடவை, விரதங்கள் :- கந்தசஷ்டி, திருக்கார்த்திகை சுக்கிர வாரம்

(4 + 6 + 6 + 4 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) (அ) கி. பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்து வட இந்தியாவின் பெரும் பகுதியில் முஸ்லிம் ஆட்சி நடைபெற்றது. முஸ்லிம் ஆட்சியால் இந்து கலாச்சாரம் ஓரளவுவிற்குப் பாதிக்கப்பட்டது. ஒரு கடவுட் கோட்பாட்டை இஸ்லாமிய சமயம் வலியுறுத்தியது. இந்து சமயத்திற்கு மாறான இவர்களது கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் பக்தி இயக்கத்தை உருவாக்கினர். இராமானந்தர் - இராமானுசரின் வட இந்திய சீட பரம்பரை இராமநந்தருடன் தொடங்குகின்றதெனலாம். இவர் இராமன் மீது பக்தியில் ஆழ்ந்தவர். இராமானுசரிடம் அருளுரை பெற்று வைணவத்தை மேற்கொண்டார். அரசிறை அதிகாரியான இவர் வரிப்பணம் கொண்டு இராமனுக்கு கோயில் எழுப்பியவர். அதற்கு தண்டனையாக அரசன் இவரைச் சிறையிலிட்டான் எனவும் இராமனின் அருளால் அவர் சிறையினின்றும் விடுதலை பெற்றார்.

(ஆ) கபீர்தாசர்

இந்து சமயக் கருத்துக்களையும் இஸ்லாமியக் கருத்துக்களையும் இணைந்த ஒரு வகைச் சமய நெறியிலே நின்றார் என்று கூறப்படுகிறது. கோயில் வழிபாட்டில் விக்கிர வழிபாட்டில் நம்பிக்கையில்லை. இவரை ஆன்மீக அனுபவம் பெற்ற அநுபூதிமான் என்பர்.

(இ) மீராபாய்
இராசபுத்தானத்து சிற்றரசன் மகளாகிய மீரா கண்ணன் மீது கொண்ட அளவற்ற காதலினால் உள்ளம் உருகிப் பாடியவர். பக்திப் பாமாலை புனைந்த மீராபாய் வடநாட்டு ஆண்டாள் போன்ற பெருமை உடையவர். இவர் பாடல்கள் கண்ணனிலே மீரா கொண்ட பக்தியினை நன்கு புலப்படுத்துகின்றன. (6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

05) (அ) ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து இந்து சமயத்தில், சமூகத்திலுள்ள குறைபாடுகள், மூடக் கொள்கைகள் கண்டிக்கப்பட்டன மக்கள் மேலை நாட்டவரின் கண்டனத்திற்கு எதிராக இந்து சமய சமூகக் குறைபாடுகளை களைய முன் வந்தனர். இவ்வாறு ஒன்று பட்ட குறிக்கோளுடன் செயற்பட்டவர்கள் நவீன இந்து சமய சீர்திருத்த இயக்கங்களை உருவாக்கினர்.

(ஆ) இராஜாராம் மோகன்ராஜ் 1774 ல் தோன்றிய பரந்த நோக்கு சுயசிந்தனை உடையவர் பல்லிறைக் கோட்பாடு விக்கிரக வழிபாட்டை எதித்தவர் - மேலை நாட்டு கொள்கைகளில் நல்லவற்றை பின்பற்ற விளைந்தவர் பாலிய விவாகம், பலியிடல், உடன் கட்டை ஏறல் பலதார மணம் என்பவற்றை எதிர்த்தவர். விதவை மறுமணம் பெண்கல்வியை ஆதரித்தவர். - பிரமசமாஜத்தின் கொள்கைகள் அதன் பிற்காலப் போக்குகள் விளக்கப்பட வேண்டும்.

(8 + 12 = 20 புள்ளிகள்)

06) சோழர் காலத்தில் பொலநறுவை தலை நகராக்கப்பட்ட பின்னணி பொலநறுவையில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் கலைகள் சமய வளர்ச்சி பற்றி எழுதப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

07) பல்லவர்கால கட்டடக்கலை தோற்றம் பெற்ற பின்னணி மகேந்திரவர்மன் பாணி, நரசிம்மவர்மன் பாணி, இராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி பற்றியும் ஆலயங்களின் அமைப்பு அதன் கலையம்சங்கள் அமைந்த இடங்கள் பற்றி விளக்க வேண்டும். (20 புள்ளிகள்)

08) (அ) சிந்துவெளிகால சிவ வழிபாடு
சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க கற்கள், யோகநிலையில் காணப்படும் முத்திரை நடராஜர் வடிவம் முத்தலை சிவன் பற்றிய விளக்கம்.

(ஆ) ஆகமம்
பொருள் விளக்கம் - தொன்று தொட்டு வரும் அறிவு ஒவ்வொரு சமயத்திற்குமுரிய ஆகமங்கள் ஆகமம் சிறப்பு நூல்கள் என்பதன் விளக்கம் - ஆலய அமைவுகள் - கிரியைகள் ஆகமத்தின் உட்பிரிவுகள் ஆகமம் கூறும் கிரியைகள்

(இ) அக்கினி
வேதகாலத்தின் முதன்மைத் தெய்வங்களில் ஒன்று மூவுலகத்திற்கு செல்லும் வல்லயைுடைய தெய்வம் மனைத் தெய்வம், தூய்மையின் சின்னம் தேவதூதன் என அழைக்கப்படுபவன் வழிபடுவோனையும் வழிபடும் தெய்வத்தையும் இணைக்கும் தூதுவனாக செயற்படுபவன்.

(ஈ) திருமந்திரம்
திருமூலரால் எழுதப்பட்டது 10 ஆம் திருமுறையாகப் போற்றப்படுவது தமிழ் மூவாயிரம் என போற்றப்படுவது சைவ சிந்தாந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறுவது.

(உ) திருக்கேதீச்சரம்
ஈழத்திலுள்ள பஞ்ச ஈச்சரங்களில் ஒன்று நாயன்மார்களால் பாடப் பெற்ற சிறப்பிற்குரியது. கேதுவால் வழிபடப்பட்டது. மூர்த்தி - தலம் - தீர்த்தச், சிறப்புக்கள் மகோற்சவங்கள் ஆலயத்தின் சிறப்புக் கூறும் இலக்கியங்கள் என்பன பற்றி விளக்க வேண்டும்.
(4 x 5 = 20 புள்ளிகள்)